# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## மானியக் கோரிக்கை எண்.32

## அறிவிப்புகள்

## 2016 – 2017

**டாக்டர் நிலோபர் கபில்**
**தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

# அறிவிப்புகள் 2016–2017

**அறிவிப்பு எண்.1**

**சட்டமுறை எடையளவு சட்டம் குறித்தும், நுகர்வோரின் குறைகளை தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட கைபேசி செயலி குறித்தும், ஒரு விளம்பர குறும்படம் தயாரித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.**

பொதுமக்களின் குறைகளை களைவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** சட்டமுறை எடையளவு சட்ட விதிகளை அறிந்து கொள்ளவும், நுகர்வோர் குறைகளைக் களைய ஏற்படுத்தப்பட்ட **கைபேசி செயலியை (Mobile Apps)** பயன்படுத்துவது குறித்தும், விளம்பர குறும்படம் தயாரிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**அறிவிப்பு எண். 2**

**அமைப்புசாரா தொழிலாளர்கள் அதிக அளவில் நலவாரியங்களில் பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் பெறும் வகையில் வாரியத் திட்டங்கள் குறித்து குறும்படம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.**

தொழிலாளர் துறையின் கீழ் செயல்படும் 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் குறித்து அமைப்புசாரா தொழிலாளர்கள் அறிந்து கொள்ளவும், அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் அதிக அளவில் தங்களை பதிவு செய்து கொண்டு நலத்திட்ட உதவிகள் பெறுவதை ஊக்குவிக்கவும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பதினைந்து இலட்சம் ரூபாய்** செலவில் ஒரு விளம்பர குறும்படம் தயாரிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**அறிவிப்பு எண். 3**

**வேலைவாய்ப்பு பெறுவதற்காக பயிற்சி மற்றும் பாடங்கள் கற்பிக்க இணைய வழி கற்கும் முறை (Virtual Learning System) ஏற்படுத்துதல்.**

இணையதளங்களைப் பயன்படுத்தி கற்கும் வசதிகளை அதிகப்படுத்தி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெருக்குவதில் முனைப்புடன் ஈடுபட்டுவரும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இரண்டு கோடி ரூபாய்** செலவில் பயிற்சி மற்றும் பாடங்கள் கற்பிக்க இணைய வழி கற்கும் முறை (Virtual Learning System) ஏற்படுத்தப்படும்.

**அறிவிப்பு எண். 4**

**போட்டித் தேர்வுகளில் ஏழை எளிய மாணவர்கள் தேர்ச்சி பெறுவதற்காக, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கட்டணமில்லா வகுப்புகள் நடத்தப்படும்.**

கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவ / மாணவிகள் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற வசதியாக, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பத்து அரசு கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில், கட்டணமில்லா வகுப்புகள் நடத்த **ஐம்பது இலட்சம் ரூபாய்** செலவில், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மூலம் அமைக்கப்படும்.

**அறிவிப்பு எண். 5**

**வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரும் 12 புதிய தொழிற் பிரிவுகளை எட்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தொடங்குதல்.**

இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக இடையராது பாடுபட்டு வரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** இளைஞர்களுக்கு கூடுதலாக வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையிலும், சுய வேலைவாய்ப்பு திறன் பெறும் வகையிலும், **10.67 கோடி ரூபாய்** செலவில் பனிரெண்டு புதிய தொழிற்பிரிவுகள் எட்டு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஏற்படுத்தப்படும்.

**அறிவிப்பு எண். 6**

**மொழித்திறன், கணினித் திறன் மற்றும் மென்திறன் பயிற்சி வழங்க ஏதுவாக, 17 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மொழி மற்றும் மென் திறன் ஆய்வகம் அமைத்தல்.**

கடந்த ஆண்டு அறுபது தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோருக்காக மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டதுபோல், மேலும் பல மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 5.18 கோடி ரூபாய்** செலவில் பதினேழு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் அதேபோன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்**.**

**அறிவிப்பு எண். 7**

**திறன் பயிற்சி திட்டங்களை மாவட்ட அளவில் சீரிய முறையில் செயல்படுத்திட மாவட்ட பயிற்சி கண்காணிப்பு அமைப்பு உருவாக்குதல்.**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்திடவும், திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் பயிற்சிகளை நெறிப்படுத்தவும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** 32 மாவட்டங்களை உள்ளடக்கி, இருபத்தி ஆறு உதவி இயக்குநர் நிலையிலான கண்காணிப்பு அமைப்புகள், **115.85 இலட்சம் ரூபாய்** செலவில் உருவாக்கப்படும்.

**அறிவிப்பு எண். 8**

**அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாளர்களும் பயிற்சியாளர்களும் உரிய நேரத்தில் வருகை புரிவதை உறுதி செய்யும் வகையில் பயோமெட்ரிக் (Biometric) வருகைப் பதிவு முறையை விரிவு படுத்துதல்.**

தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் வருகையை கண்காணிக்க **62** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயோமெட்ரிக் (Biometric) வருகைப் பதிவு முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது**.** இவ்வாண்டு அவ்வசதியை மேலும் **22** தொழிற்பயிற்சி நிலையங்களில் **7.7 இலட்சம் ரூபாய்** செலவில் விரிவுபடுத்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்**.**

**அறிவிப்பு எண். 9**

**தொழிற்சாலைகளில் நேரடி பயிற்சிகள் வாயிலாக முழுத்திறன் பெற்ற இளைஞர்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்கிட தொழிற்பழகுநர் (Apprentice) சேர்க்கை முகாம்கள் நடத்துதல்.**

தொழிற்சாலைகளில் நேரடி பயிற்சிகள் வாயிலாக திறன் பெற்ற இளைஞர்களை உருவாக்கிட தொழில் பழகுநர் பயிற்சி திட்டத்தை முழு வீச்சில் நடைமுறைப்படுத்திட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள். இந்த உயரிய நோக்கை அடைய, ஒவ்வொரு ஆண்டும் மண்டல அளவில் **பத்து இலட்சம் ரூபாய்** செலவில் தொழில் பழகுநர் சேர்க்கை முகாம்கள் நடத்தப்படும்.

**அறிவிப்பு எண். 10**

**அரசு தொழிற் பயிற்சி நிலையங்களின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில் எட்டு அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் பணியிடங்களை துணை இயக்குநர் பணியிடங்களாக தரம் உயர்த்துதல்.**

பணியாளர்களின் நிர்வாகத் திறனை உயர்த்தவும், தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டினை வலுப்படுத்தவும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி,** 600 பயிற்சியாளர்களுக்கு மேல் சேர்க்கை செய்யும் எட்டு தொழிற்பயிற்சி நிலையங்களின் முதல்வர் பணியிடங்கள் துணை இயக்குநர் நிலை பணியிடங்களாக தரம் உயர்த்தப்படும்.

**அறிவிப்பு எண்.11**

**மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைநாடுநர்கள் / இளைஞர்களுக்கான திறன் மதிப்பீடு மற்றும் ஆய்வு மையம் ஏற்படுத்துதல்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் மதிப்பீட்டு மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களை நாடி வரும் வேலைநாடுநர்களின் தொழில் திறன்களை மதிப்பீடு செய்து அவர்களுக்கு உரிய பயிற்சி வழங்க ஏதுவாக, உரிய தொழில்நுட்ப சாதனங்களுடன் 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் **1.92 கோடி ரூபாய்** செலவில் திறன் மதிப்பீடு மற்றும் ஆய்வு மையம் ஏற்படுத்தப்படும்.

**அறிவிப்பு எண்.12**

**அமைப்புசாரா தொழிலாளர்கள் தமது முன் அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து (Recognition of Prior Learning – RPL) அதற்கான திறன் சான்றிதழ்கள் வழங்கி மேம்பட்ட வேலைவாய்ப்பு பெற வழிவகை செய்தல்.**

அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** பல்வேறு நலத்திட்டங்களை வழங்கியுள்ளார்கள். மேலும் தொழிலாளர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்து திறன் சான்றிதழ் வழங்கும் முன்னோடித் திட்டத்தை **10 கோடி ரூபாய்** செலவில் **ஒரு லட்சம் தொழிலாளர்கள்**, மேம்பட்ட வேலைவாய்ப்பு பெறும் வகையில் செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

**அறிவிப்பு எண்.13**

## இளைஞர்கள் தங்களது தொழில் திறன்களையும் திறமையையும் வெளிப்படுத்தும் வகையில் மாநில அளவில் திறனாய்வு போட்டிகள் (State level Skill Summit) நடத்துதல்.

தொழில்திறன் உள்ளவர்கள் தங்களது அனுபவம் மூலம் பெற்ற தொழில் நுட்பத் திறமையை வெளிக்காட்டுவதற்கு சரியான களம் ஏற்படுத்தித் தரும் வகையில் அனைத்து தரப்பினரும் அதாவது ஐ.டி.ஐ.–களில் பயின்றோர், தொழில் பழகுநர் பள்ளிகள், கல்லூரிகளில் பயின்றவர்களோடு அனுபவம் மூலம் தொழில் திறன் பெற்றவர்களும், அமைப்புசாரா தொழிலாளர்களும், கலந்து கொண்டு தங்களது தொழில்நுட்பத் திறமையை வெளிப்படுத்தும் வண்ணம் இவ்வருடம் முதல் **28.00 இலட்சம் ரூபாய்** செலவில் மாநில அளவிலான தொழில்நுட்ப திறனாய்வு போட்டிகள் நடத்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

**அறிவிப்பு எண்.14**

**அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் கட்டுமான பணிகளுக்கான ஒப்பந்த பணிகளில் திறன் சான்றிதழ்கள் பெற்ற தொழிலாளர்களை ஈடுபடுத்துதல்.**

அனுபவத்தின் மூலம் திறன் பெற்றவர்களையும் திறன் மதிப்பீடு செய்து அவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் முன்னோடி திட்டத்தை செயல்படுத்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** இத்திட்டத்தின்கீழ் திறன் சான்றிதழ் பெற்ற தொழிலாளர்களை பணியமர்த்தும் போது விபத்துகள் பெருமளவு குறையும். இதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, இனிமேல் அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்கள் மேற்கொள்ளும் அனைத்து ஒப்பந்த பணிகளிலும், திறன் சான்றிதழ்கள் பெற்ற தொழிலாளர்களை படிப்படியாக ஈடுபடுத்த அரசாணை வெளியிடப்படும்.

**அறிவிப்பு எண்.15**

**பேராபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளில் வெளியிடப்படும் நஞ்சு மற்றும் நச்சுப்புகை அதிகபட்ச அளவிற்கு மிகாமல் கண்காணித்து தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் ஒரு கண்காணிப்பு மையம் அமைத்தல்.**

தமிழ்நாட்டில் உள்ள நஞ்சு மற்றும் நச்சுப்புகை வெளியாகும் வாய்ப்புள்ள தொழிற்சாலைகளில் பணிசெய்யும் தொழிலாளர்களையும், அத்தொழிற்சாலைகளைச் சுற்றிலும் வசிக்கும் பொதுமக்களையும், நஞ்சு மற்றும் நச்சுப்புகைகளின் பாதிப்புகளில் இருந்து காக்கும் வகையில் தொழிலாளர் மற்றும் பொதுமக்களின் நலனிலும் பாதுகாப்பிலும் மிகுந்த அக்கறை கொண்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** சிறப்பு மென்பொருள் உருவாக்கி தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் சர்வர் உடன் கூடிய கண்காணிப்பு மையம் **29.75 இலட்சம் ரூபாய்** செலவில் ஏற்படுத்தப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்படும்.

**அறிவிப்பு எண்.16**

**தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப்பிரிவின் 30 அலுவலர்களுக்கு மடி கணினிகள் வழங்குதல்.**

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப்பிரிவு அலுவலர்கள், விபத்துகளை புலனாய்வு செய்து அறிக்கைகள் தயார் செய்யவும், பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தவும், இவ்வியக்கக வலைதளத்தினைப் பயன்படுத்தி பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 22.12 இலட்சம் ரூபாய்** செலவில் 30 மடிகணினிகள் வழங்கப்படும்.

**அறிவிப்பு எண்.17**

**கட்டுமான பணியிடங்களில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.**

கட்டுமான பணிகளில் தொழிலாளர்கள் அதிகமாக ஈடுபட்டு வரும் நிலையில் போதிய விழிப்புணர்வு இன்மையால் அவர்கள் விபத்திற்கு ஆளாவதைத் தடுக்கும் வகையில் கட்டுமான இடங்களிலேயே பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்த, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** உத்திரவிட்டுள்ளார்கள். அதன்படி, கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதியில் இருந்து **32 இலட்சம் ரூபாய்** செலவில் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு மூலம் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

**அறிவிப்பு எண்.18**

**கட்டுமான தொழிலாளர்களுக்கு நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு பயிற்சி அளித்தல்.**

இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயர்ந்து பணிபுரியும் கட்டுமான தொழிலாளர்களை கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் சேர்த்து அவர்களுக்கும் நலத்திட்டங்கள் வழங்க உத்தரவிட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,** வெளி மாநில தொழிலாளர்கள் பாதுகாப்பாக பணி புரிவதை உறுதி செய்ய, அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் அவர்களது தாய் மொழிகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த குறும்படங்கள் மற்றும் புகைப்படங்களுடன் கூடிய தகவல் பலகைகள் **15 இலட்சம் ரூபாய்** செலவில் தயாரித்து பயிற்சி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

**அறிவிப்பு எண்.19**

**தற்போது இயங்கி வரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் 13 புதிய பகுதிகளை இணைத்தல்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தம் 50,253 தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் 42 புதிய பகுதிகள் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இந்த ஆண்டிலும் 15,238 தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில், மீஞ்சூர் புறநகர், வாழப்பாடி புறநகர், பள்ளிப்பாளையம் புறநகர், கொடுவிலார்பட்டி பகுதி, ராம்ஜிநகர் புறநகர், மாத்தூர் புறநகர், திருச்சி கிழக்கு மற்றும் மேற்கு பகுதி, செங்கோட்டை புறநகர், காரியாப்பட்டி புறநகர், இளம்பிள்ளை புறநகர், பாகலூர் புறநகர், திருச்செங்கோடு புறநகர், வாழவந்தான்கோட்டை பகுதி ஆகிய பகுதிகளை

**1.52 கோடி ரூபாய்** செலவில் ஏற்கனவே இயங்கி வரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்க உத்திரவிட்டுள்ளார்கள்.

**டாக்டர் நிலோபர் கபில்**
**தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**